**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 105/2003**
**Deposition of witness for prosecution -PW-16**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.வனஜாதேவி |
| Father Name | : | திரு.குமரகுரு |
| Village | : | சத்திரக்குடி |
| Taluk | : | பரமக்குடி |
| Calling | : | வீட்டு வேலை |
| Religion | : | இந்து |
| Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of 06$^{th}$ day of August 2019.

முதல் விசாரணை :-

நான் சத்திரக்குடியில் வசிக்கிறேன். வீட்டு வேலை செய்கிறேன். எதிரிகளை தெரியும். எனது பெயரில் சத்திரக்குடியில் நிலம் உள்ளது. சேமனூர் தொ.வே.கூட்டுறவு வங்கியில் எதிரி தனசேகரன் செயலாளராக இருந்தார். எதிரி கமலம் தலைவராக இருந்தார். மேற்படி வங்கியில் கடன் பெறுவதற்கும், உரம் பெறுவதற்கும், மெம்பராக சேர வேண்டும் என எதிரி தனசேகரன் கூறியதால் மெம்பராக சேர எதிரி தனசேகரன் என்னிடம் கையெழுத்து வாங்கினார். நான் கையெழுத்து போட்டு கொடுத்த பிறகு மேற்படி வங்கியில் இருந்து நான் எந்தவித உர கடனோ, உரமோ பெறவில்லை. மேற்படி வங்கியில் இது சம்பந்தமாக என்னை கூப்பிட்டு விசாரித்தார்கள். நான் மேலே சொன்னதை சொல்லி வாக்குமூலம் கொடுததேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த வாக்குமூலம் ஏற்கனவே அ.சா.ஆ.93 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசாரும் என்னை விசாரித்தார்கள்.

1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

நான் பயிர் செய்வதற்கான நிலம் என்னிடம் கிடையாது என்றால் சரிதான். கடன் தருவார்கள் என்ற எண்ணத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. மெம்பராக சேருவதற்காக தான் கையொப்பம் செய்தேன். வங்கி அதிகாரிகள் என்னை விசாரிக்கும்போதும் இதை தான் சொன்னேன் என்றால் சரிதான். உரக்கடன் பெறுவதற்கோ, உரம் பெறுவதற்கோ நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் உரமும், கடனும் பெறவில்லை என்றால் சரிதான். என்னை புத்தூர் வங்கியில் வைத்து விசாரித்தார்கள். யார் விசாரித்தார்கள் என்று தெரியவில்லை. நான் கடன் வாங்கியதாக கேட்டு விசாரித்தார்கள். நான் அவ்வாறு கடன் எதுவும் பெறவில்லை. விசாரித்த தேதி, மாதம் ஞாபகமில்லை. அதில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. பொய் சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2, 3 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

இல்லை.

மறுவிசாரணை - இல்லை.